



# சக்கர வியூகம்



டிரஸ்ட் ஆரம்பித்திட...
புதியதாக டிரஸ்ட்(அறக்கட்டளை), பவுண்டேஷன்(FOUNDATION), ஆசிரமம், சங்கம், மன்றம், கழகம்(ORGANISATION), ஆன்மீக அமைப்புகள்,அரசியல் கட்சி பதிவு செய்து தொடங்கிடவும் ஆலோசனைகளுக்கும் தொடர்பு கொள்ளவும்.
பகவான் பவுண்டேஷன்
BHAGAVAAN FOUNDATION
CELL: 99446 16559



Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 198 11.1.2026 SUNDAY MARGAZHI : 27 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 198 11.1.2026 ஞாயிற்றுக்கிழமை மார்கழி : 27 விலை : ரூ.5/–


## சென்னை பெரம்பூரில்

# “பொங்கல் விழா”

## முதல்வர் ஸ்டாலின் பங்கேற்பு

சென்னை, ஜன.11-
தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னை, பெரம்பூர், டான்பாஸ்கோ பள்ளி வளாகத்தில் நடைபெற்ற பொங்கல் விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின், ஆற்றிய உரை:

தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை எழுச்சியோடு கொண்டாடும் இந்த சிறப்பான நேரத்தில் உங்களை எல்லாம் நான் சந்தித்து, இந்த கொளத்தூர் தொகுதியில் - மன்னிக்கவும் - நம்முடைய கொளத்தூர் தொகுதியில் இருக்கக்கூடிய கழகத்தின் செயல்வீரர்களுக்கு பொங்கல் வாழ்த்துகளை தெரிவிக்கும் ஒரு நல்ல வாய்ப்பு எனக்கு முன்கூட்டியே கிடைத்திருக்கிறது.

இந்த சிறப்பான நிகழ்ச்சியை அது எந்த நிகழ்ச்சியாக இருந்தாலும் கிழக்கு மாவட்டத்தின் செயலாளராக நம்முடைய சேகர்பாபு அவர்கள் இருந்தாலும், நம்முடைய தொகுதி என்று சொன்னால் அதில் ஒரு எழுச்சி இருக்கும், ஒரு சிறப்பு இருக்கும், ஒரு மகிழ்ச்சி இருக்கும், ஒரு ஆர்வம் இருக்கும், ஆரவாரம் இருக்கும். நம்மையே அறியாமல் நம்முடைய உள்ளத்தில் ஒரு புளங்காகிதம் இருக்கும். அந்த உணர்வோடு இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருக்கும் நம்முடைய



சேகர்பாபு அவர்களுக்கும் அவருக்கு துணை நின்ற கழக நிருவாகிகளுக்கும் நான் முதலில் என்னுடைய நன்றியை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நான் பல நேரங்களில் கொளத்தூர் நிகழ்ச்சிக்கு வருகின்றபோது சொல்வதுண்டு, என்னதான் முதலமைச்சராக இருந்து பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு, பல்வேறு மாவட்டங்களில் நடைபெறும் அரசு நிகழ்ச்சிகளாக இருந்தாலும் சரி, கழக நிகழ்ச்சிகளாக இருந்தாலும் சரி, பொது நிகழ்ச்சிகளாக இருந்தாலும் சரி. அந்த நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும் நேரத்தில் என்ன மகிழ்ச்சி அடைகின்றேனோ, என்ன பெருமை அடைகின்றேனோ - ஆனால், அதைவிட கொளத்தூர் தொகுதியில் ஒரு நிகழ்ச்சி நடைபெறுகிறது என்றால், அதில் ஒரு வேகமும், ஒரு எனர்ஜியும் எனக்கு வந்துவிடுகிறது. அந்த எனர்ஜியுடன் தான் நான் உங்கள் முன்னால் நின்றுகொண்டிருக்கிறேன்.

பொங்கல் விழாவை இன்றைக்கு நாம் சிறப்பாக கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

நம்முடைய திராவிட மாடல் அரசு பொறுப்பேற்று நான்கரை ஆண்டு காலத்தில் என்னென்ன திட்டங்களையெல்லாம் செய்திருக்கிறது, என்னென்ன சாதனைகளையெல்லாம் புரிந்திருக்கிறது என்பது உங்களுக்கு நான் எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. ஆனால், நீங்கள் மக்களிடத்தில் எடுத்துச் சொல்ல வேண்டும். அதற்காகத்தான் இந்த பொங்கல் விழாவை இப்படி எழுச்சியோடு கூட்டி உங்களை ஊக்கப்படுத்தி உற்சாகப்படுத்துவதற்காக, இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே நீங்கள் தேர்தல் களத்தில் ஆற்ற வேண்டிய பணிகளில் 50 சதவிகிதம் முடித்துவிட்டீர்கள். இன்னும் 50 சதவிகிதம் தான் மீதம் இருக்கிறது.

இன்றைக்கு பல்வேறு கட்சிகளை சார்ந்தவர்கள். ஏன், பா.ஜ.க.வில் இருக்கக்கூடியவர்கள் கூட என்ன சொல்கிறார்கள் என்றால், தி.மு.ககாரர்கள் போன்று யாராலும் வேலை செய்ய முடியாது. இன்னும் சொல்ல வேண்டும் என்றால், 1967 இல் பேரறிஞர் அண்ணா தலைமையில் ஆட்சி அமைந்தபோது அன்றைக்கு முன்னாள் முதலமைச்சராக இருந்த பெரியவர் பக்தவச்சலம் அவர்கள் பத்திரிகையாளர்களிடம் பேட்டி அளித்தபோது ஒன்றைக் குறிப்பிட்டுச் சொன்னார். “திமுக காரன் ஒரு சிங்கில் டீயை குடித்துவிட்டு பம்பரமாக வேலை செய்வான். அதற்கு நாமெல்லாம் ஈடாக முடியாது” என்று வெளிப்படையாகவே சென்னவர் அவர். அதே உணர்வோடு இன்றைக்கும் நான் பார்க்கிறேன்.

நீங்கள் ஆற்றக்கூடிய பணிகள், ஏதோ கொளத்தூர் தொகுதியில் மட்டுமல்ல. ஒட்டுமொத்தமாக தமிழகத்தில் இருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் நம்முடைய செயல் வீரர்கள் ஆற்றும் அந்தப் பணிகளையெல்லாம் பார்க்கின்றபோது 200 தொகுதிகளுக்கு குறையாமல் வெற்றி பெறுவோம் என்று, நம்முடைய கூட்டணி நிச்சயமாக வெற்றிபெறும் என்று நான் ஏற்கெனவே சொல்லியிருந்தேன், ஆனால், நாம் இப்போது ஆற்றியிருக்கும் பணிகளையெல்லாம் பார்க்கின்றபோது 200 தொகுதிகளையும் தாண்டி வரும் என்ற நம்பிக்கை எனக்கு வந்திருக்கிறது.

அந்த நம்பிக்கையோடு பொங்கல் விழாவை நாம் கொண்டாடுகிறோம். பொங்கல் விழாவை கொண்டாடும் இந்த நேரத்தில் உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய பொங்கல் வாழ்த்துகளைத் தெரிவித்து வரவிருக்கும் தேர்தலில் ஒரு மாபெரும் வெற்றி பெறுவதற்கு உறுதியெடுப்போம் சபதம் எடுப்போம், என்று கூறி மீண்டும் வாழ்த்து சொல்லி விடைபெறுகிறேன்.

## உடுமலை சின்ன வீரன்பட்டியில் திராவிட பொங்கல் திருவிழா



■ உடுமலை கிழக்கு ஒன்றியம் சார்பாக உடுமலை கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் எஸ் கே எம் தங்கராஜ் (எ) எஸ்.கே.மெய்ஞானமூர்த்தி அவர்கள் தலைமையில், உடுமலை கிழக்கு ஒன்றிய திமுக கழக அலுவலக மைதானத்தில், 100 மீட்டர் பெண்கள் ஓட்டப்பந்தயத்தை ஒன்றிய கழகச் செயலாளர் தங்கராஜ் அவர்கள் துவக்கி வைத்தார். இதன் தொடர்ச்சியாக ஓட்டப்பந்தயத்தில் வெற்றி பெற்றவர்களுக்கு முதல் பரிசு ரூபாய் 10,000 சத்தியா அவர்களுக்கும், இரண்டாம் பரிசு ராமாத்தாள் அவர்களுக்கு ரூபாய் 5000 வழங்கினார் இந்நிகழ்ச்சியில் ஒன்றிய வர்த்தக அணி சின்னவீரன்பட்டி தனபால் மற்றும் சார்பணி நிர்வாகிகள் மகளிர் அணி நிர்வாகிகள் விளையாட்டு அணி நிர்வாகிகள் ஊர் பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.

## தி.மு.க, தயவு இல்லாமல் படங்கள் ரிலீஸ் ஆகாது : ராஜா

சென்னை, ஜன.11-
“ தமிழகத்தில் தி . மு . க , குழுமத்தின் தயவு இல்லாமல் , எந்த படமும் வெளிவர முடியாது , “ என பா . ஜ , மூத்த தலைவர் எச் . ராஜா தெரிவித்தார்
அவர் அளித்த பேட்டி
கடந்த இரண்டாயிரத்து பதினான்கு லோக்சபா தேர்தலின்போது , இந்தியாவின் பிரதமராக மோடி தேர்வு செய்யப்பட்டால் , நூறு நாள் திட்டத்தை ரத்து செய்து விடுவார் என , முன்னாள் மத்திய அமைச்சர் சிதம்பரம் பிரசாரம் செய்தார் . ஆனால் , பிரதமர் மோடி பதவியேற்று பதினொன்று ஆண்டுகள் ஆகி விட்டன . அவர்கள் அளித்த நூறு நாள் வேலை திட்டம் , நூற்று இருபத்து ஐந்து நாட்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது . மேலும் , கிராமப்புறங்களில் நடவு மற்றும் அறுவடை காலங்கள் தவிர்த்து , இத்திட்டம் செயல்படுத்தப் படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது

விவசாய வேலைக்கு ஆட்கள் கிடைக்கவில்லை என்று விவசாயிகள் எழுப்பிய புகாரைத் தொடர்ந்து , திட்டம் மேம்படுத்தப்பட்டுள்ளது . ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்பு திட்டத்தில் , பயோமெட்ரிக் முறை பின்பற்றப்படும் என்பதற்குத்தான் திராவிட கட்சிகள் எதிர்ப்பு தெரிவிக்கின்றன . பயோமெட்ரிக் முறையால் கொள்ளையடிக்க முடியாது என்பதே எதிர்ப்புக்கான பிரதான காரணம்

பராசக்தி யோ , ஜனநாயகன் படமோ , தணிக்கையில் பிரச்னை என்றால் , அதை எப்படி மத்திய அரசு மீதான குற்றமாக சொல்ல முடியும் . திரைப்பட தணிக்கை சான்றுக்கு என சில விதிமுறைகள் உள்ளன . அதன் அடிப்படையில் தான் சான்று அளிக்க முடியும் . இவ்விரு படங்கள் வெளியாவதில் ஏற்பட்ட சிக்கலுக்கு , பட தயாரிப்புக் குழுதான் காரணம் ; மத்திய அரசுக்கு துளிகூட சம்பந்தமில்லை . நடிகர் விஜய்க்கும் பா . ஜ , வுக்கும் எவ்வித பிரச்னையும் இருந்ததில்லை

மத்திய தணிக்கை துறை அதிகாரிகள் , படத்தில் ஆட்சேபனைக்குரிய காட்சி பதிவுகள் இல்லை என்றால் , சான்றளிக்க தயங்க மாட்டார்கள்

சர்ச்சைக்குரிய காட்சிப் பதிவுகள் இருப்பதாலேயே , தணிக்கை சான்று வழங்குவதில் சிக்கல் உள்ளது . இப்படி தணிக்கை சான்று வழங்க மறுப்பது , இதற்கு முன்பும் நடந்துள்ளது . எந்தத் திரைப்படமாக வேண்டுமானாலும் இருக்கட்டும் . தமிழகத்தைப் பொறுத்தவரை , ஆளுங்கட்சி நடத்தும் நிறுவனங்கள் தயவு இல்லாமல் வெளியிட முடியாது . தமிழகத்தில் தே . ஜ , கூட்டணி ஆட்சி ஏற்பட்டதும் இப்பிரச்னைக்கு முடிவு கட்டப்படும் . இவ்வாறு அவர் கூறினார்.



■ மாண்புமிகு வீட்டு வசதி மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் திரு.சு.முத்துசாமி அவர்கள் ஈரோடு மாவட்டம், சித்தோடு அரசினர் பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற விழாவில் தமிழ்நாடு தூய்மை பணியாளர் நலவாரிய உறுப்பினர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ச.கந்தசாமி,இ.ஆ.ப.,தூய்மை பணியாளர் நலவாரிய தலைவர் திரு.திப்பம்பட்டி ஆறுச்சாமி, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் திரு.கே.இ.பிரகாஷ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் திரு.வி.சி.சந்திரகுமார், அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஏ.ஜி.வெங்கடாசலம், மாண்புமிகு மாநகராட்சி மேயர் திருமதி.நாகரத்தினம் சுப்பிரமணியம், ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் திரு.அர்பித் ஜெயின்,இ.ஆ.ப., தூய்மை பணியாளர் நலவாரிய துணை தலைவர் திருமதி.கனிமொழி பத்மநாபன் உட்பட பலர் உள்ளனர்.

## த.வெ.க, பாஜக, அதிமுக கட்சி தொண்டர்கள் 50 பேர் அமைச்சர் ஐ.பெரியசாமி முன்னிலையில் திமுகவில் இணைந்தனர்

சின்னாளபட்டி, ஜன.11
திண்டுக்கல் மாவட்டம் சித்தையங்கோட்டை பேரூராட்சிக்குட்பட்ட சேடபட்டி மற்றும் லட்சுமிபுரத்தைச் சேர்ந்த த.வெ.க. பாஜக, அதிமுக கட்சி தொண்டர்கள் 50 பேர் த.வெ.க. கட்சியைச் சேர்ந்த முன்னாள் இளைஞரணி செயலளார் விவேக் தலைமையில், 50 பேர் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கு சால்வை அணிவித்து, தங்களை திமுகவில் இணைத்துக் கொண்டனர். கட்சியில் இணைந்தவர்களுக்கு கட்சி சின்னம் பொறித்த ஆடை அணிவித்து வாழ்த்து தெரிவித்து பேசிய அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள், இன்று பல கட்சிகளைச் சேர்ந்த தொண்டர்கள், நிர்வாகிகள் கட்சியில் இணைகிறார்கள் என்றார். அதற்கு ஒரே காரணம் முத்தமிழ் அறிஞர் வழியில் வந்த திராவிடமாடல் ஆட்சி நாயகர் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் மற்றும் இளைஞர்களின் எழுச்சி நாயகன் துணை முதல்வர்



உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சிறப்புமிகு திட்டங்களும், செயல்பாடுகளும்தான் காரணம் என்றார். கழகத்தில் இணைந்தவர்களையும், ஒருபோதும் நான் கைவிட மாட்டேன். என்னால் முடிந்தவரை ஆத்தூர் தொகுதியைச் சேர்ந்த இளைஞர்களுக்கு அரசு வேலைவாய்ப்பு கிடைக்க தொடர்ந்து பாடுபடுவேன் என்றார்.

நிகழ்ச்சியின்போது தலைமை செயற்குழு உறுப்பினர்கள் தண்டபாணி, ஆத்தூர் நடராஜன், ஒன்றிய செயலாளர்கள் முருகேசன், நெடுஞ்செழியன், திண்டுக்கல் மாநகர பொருளாளர் மீடியா சரவணன், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் இல.கண்ணன், இலக்கிய அணி அமைப்பாளர் முருகானந்தம், திண்டுக்கல் கிழக்கு பகுதி செயலாளர் இராஜேந்திரகுமார், அகரம் பேரூராட்சி மன்ற தலைவர் நந்தகோபால் (எ) மணி, சித்தையங்கோட்டை பேரூர் கழக செயலாளர் சக்திவேல், பேரூராட்சி மன்ற தலைவர் போதும்பொண்ணு முரளி, முன்னாள் பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் தங்கப்பாண்டியன் மாவட்ட பிரதிநிதி சௌந்திரபாண்டியன், பேரூராட்சி வார்டு உறுப்பினர் தியாகு (எ) முத்துக்குமார், வார்டு உறுப்பினர் முருகன், இளைஞரணியைச் சேர்ந்த காதர்மைதீன், திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஸ், சிறுபான்மையினர் அணியைச் சேர்ந்த முஜீப், சித்தரேவு பெரோஸ்கான், மற்றும் இளைஞரணியினர் உட்பட திமுக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

# ஊரக, நகர்ப்புற வாழ்வாதார இயக்கப் பணியாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுக



சென்னை, ஜன.11-

ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கப் பணியாளர்களின் பணிநிலைப்பு உள்ளிட்ட கோரிக்கைகளை அரசு நிறைவேற்ற வேண்டும் என பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "தமிழ்நாடு முழுவதும் உள்ள ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கப் பணியாளர்கள் ஊதிய உயர்வு, பணி நிலைப்பு உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி காத்திருப்புப் போராட்டத்தை நடத்தி வருகின்றனர். அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவது குறித்து பேச்சு நடத்துவதற்கு கூட அழைப்பு விடுக்காமல் அவர்களை திமுக அரசு அலைக்கழிப்பது கண்டிக்கத்தக்கது.

தமிழக அரசு திட்டங்களை தொலைதூரத்தில் மக்களுக்கு கொண்டு செல்லும் சிறந்த பணியை மேற்கொண்டு வருபவர்கள் உள்ள ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கப் பணியாளர்கள் தான். ஊதிய உயர்வு, பணி நிலைப்பு உள்ளிட்ட கோரிக்கைகளை அவர்கள் பலமுறை வலியுறுத்தியும் எந்தத் தீர்வும் ஏற்படவில்லை. அதனால், வேறு வழியின்றி இப்போது காத்திருப்பு போராட்டத்தை மேற்கொண்டுள்ளனர்.

ஆண்டுதோறும் பணியை புதுப்பிக்கும் நடைமுறையை கைவிட்டு, 15 ஆண்டு பணி முடித்தவர்களுக்கு பணி நிலைப்பு வழங்க வேண்டும்; பல்வேறு நிலைகளில் உள்ள பணியாளர்களுக்கான ஊதியத்தை ரூ.25,000 முதல் ரூ.60,000 வரை ஊதியம் நிர்ணயிக்க வேண்டும்; காப்பீடு மற்றும் வருங்கால வைப்பு நிதி வழங்க வேண்டும்; வங்கிக் கணக்குகளில் ஊதியத்தை வரவு வைக்க வேண்டும் என்பன உள்ளிட்ட 14 கோரிக்கைகளை முன்வைத்து தான் அவர்கள் போராடி வருகின்றனர்.

எந்த அங்கீகாரமும், நியாயமான ஊதியமும் இல்லாமல் பணி செய்து வரும் அவர்களின் கோரிக்கைகள் மிகவும் நியாயமானவை ஆகும். எனவே, அவர்களை மேலும், மேலும் அலைக்கழிக்காமல் அவர்களை அரசு அழைத்து பேச்சு நடத்த வேண்டும். அவர்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றி போராட்டத்தைத் திரும்பப் பெறச் செய்ய வேண்டும்" என்று அவர் தெரிவித்துள்ளார்.

# கரூர் சிபிஐ அலுவலகத்துக்கு கொண்டு வரப்பட்ட விஜய்யின் பிரச்சார வாகனம்: மத்திய தடயவியல் குழு ஆய்வு



கரூர், ஜன.11-

கரூர் சுற்றுலா மாளிகை சிபிஐ அலுவலகத்திற்கு கொண்டு வரப்பட்ட விஜயின் பிரச்சார வாகனத்தை மத்திய உள்துறை அமைச்சக விவகாரத்துறை அதிகாரி தலைமையில் மத்திய தடயவியல் அறிவியல் துறை ஆய்வகக் குழுவினர் ஆய்வு செய்தனர்.

கரூர் வேலுசாமிபுரத்தில் செப். 27ம் தேதி நடந்த தவெக பிரச்சார கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். 100க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இவ்வழக்கை சிபிஐ விசாரித்து வருகிறது. இவ்வழக்கில் 200க்கும் மேற்பட்டவர்களுக்கு சம்மன் அனுப்பியும், போனில் அழைத்தும், நேரில் சென்றும் பல்வேறு தரப்பினரிடையே விசாரணை நடைபெற்று வருகிறது. நவ. 24, 25ம் தேதிகளில் தவெக நிர்வாகிகளிடம் விசாரணை நடைபெற்றது.

ஏடிஜிபிக்கள் சோனல் வி.மிஸ்ரா, சுமித் சரண் ஆகியோர் டிச. 2, 3ம் தேதிகளில் கரூர் வந்து விசாரணை குறித்து ஆய்வு மேற்கொண்டனர். மேலும் பாதிக்கப்பட்டவர்கள், பொதுமக்கள் உள்ளிட்டவர்களிடம் மனுக்கள் பெற்றனர். கரூர் ஆட்சியர் மீ.தங்கவேல், திருச்சி மத்திய மண்டல ஐஜி ஜோஷி நிர்மல்குமார், எஸ்பி கே.ஜோஷ்தங்கையா, ஏடிஎஸ்பி பிரேம்ஆனந்தன், டிஎஸ்பி செல்வராஜ், கரூர் நகர இன்ஸ்பெக்டர் ஜி. மணிவண்ணன் ஆகியோரிடம் விசாரணை நடத்தினர்.

தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையக்குழு, சம்பவ இடத்தை பார்வையிட்டு, தனியார் மருத்துவமனைகளில் விசாரணை நடத்தி சென்றது. கடந்த டிச. 29ம் தேதி தொடங்கி 3 நாட்கள் டெல்லி சிபிஐ அலுவலகத்தில் ஆட்சியர் மீ.தங்கவேல், எஸ்.பி. கே.ஜோஷ்தங்கையா உள்ளிட்ட காவல்துறை அதிகாரிகள், தவெக பொதுச்செயலாளர் புஸ்ஸி என்.ஆனந்த், தேர்தல் பிரச்சார மேலாண்மை பொதுச்செயலாளர் ஆதவ் அர்ஜுனா, இணைப் பொதுச்செயலாளர் சிடி நிர்மல்குமார் ஆகியோரிடம் விசாரணை நடைபெற்றது.

டெல்லியில் உள்ள சிபிஐ அலுவலகத்தில் நாளை மறுநாள் (ஜன. 12ம் தேதி) தவெக தலைவர் விஜய் ஆஜராக சிபிஐ சம்மன் அனுப்பியுள்ளது. இந்நிலையில் கரூர் வேலுசாமிபுரத்தில் தவெக பிரச்சாரம் நடந்த இடத்தில் மத்திய உள்துறை அமைச்சக விவகாரத்துறை (மினிஸ்ட்ரி ஆப் ஹோம் அபையர்ஸ்) அதிகாரி தலைமையில் மத்திய தடயவியல் அறிவியல் துறை ஆய்வகக் குழுவினர் 10க்கும் மேற்பட்டோர் நேற்று ஆய்வு செய்தனர். சிபிஐ அலுவலர்கள் உடனிருந்தனர்.

இந்நிலையில் தவெக தலைவர் விஜயின் பிரச்சார வாகனம் கரூர் சுற்றுலா மாளிகை சிபிஐ அலுவலகத்திற்கு இன்று (ஜன. 10) காலை 9 மணிக்கு கொண்டு வரப்பட்டது. பேருந்து ஓட்டுநர், தவெக வழக்கறிஞர் அரசு மற்றும் தவெக நிர்வாகிகள் கரூர் சுற்றுலா மாளிகைக்கு வருகை தந்திருந்தனர்.

மத்திய உள்துறை அமைச்சக விவகாரத்துறை அதிகாரி தலைமையில் மத்திய தடயவியல் அறிவியல் துறை ஆய்வகக் குழுவினர் விஜயின் பிரச்சார வாகனத்தை பார்வையிட்டு ஆய்வு செய்தனர். பேருந்தினுள் ஏறி ஆய்வு மேற்கொண்ட அவர்கள், பேருந்தை முன், பின் இயக்கக்கூறி ஆய்வு செய்தனர். இதுகுறித்து ஓட்டுநரிடம் விசாரணை நடைபெற்றது. கரூர் வேலுசாமிபுரத்தில் மத்திய தடயவியல் அறிவியல் ஆய்வகக் குழுவினர் 2வது நாளாக சாலை அளவீடு செய்யும் பணிகளை மேற்கொண்டனர்

# 'வலிமையான இந்தியாவை உருவாக்க இளைஞர்கள் வரலாற்றிலிருந்து பாடம் கற்க வேண்டும்'': அஜித் தோவல்



புதுடெல்லி, ஜன.11-

இந்திய சுதந்திரம் என்பது மிகப்பெரிய விலைக்குப் பிறகு பெறப்பட்டது என்றும் வரலாற்றிலிருந்து பாடம் கற்றுக்கொண்டு வலிமையான இந்தியாவை மீண்டும் கட்டியெழுப்ப இளைஞர்கள் முன்வர வேண்டும் என்றும் அஜித் தோவல் வலியுறுத்தியுள்ளார்.

வளர்ந்த இந்தியா(விக்சித் பாரத்) இளம் தலைவர்கள் கலந்துரையாடல் 2.வி, புதுடெல்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் இன்று தொடங்கியது. மூன்று நாட்கள் நடைபெறும் இந்த கலந்துரையாடல் நிகழ்வின் தொடக்கவிழாவில் உரையாற்றிய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல், ''சுதந்திர இந்தியா இப்போது இருப்பதுபோல எப்போதும் சுதந்திரமாக இருந்தது இல்லை. இதற்காக நமது முன்னோர்கள் பெரும் தியாகங்களைச் செய்துள்ளனர். அவர்கள் பெரும் அவமானங்களைத் தாங்கிக் கொண்டனர். ஆழ்ந்த கையறு நிலைக் காலங்களை அனுபவித்தனர். பலர் தூக்கு மேடையை எதிர்கொண்டனர்.

நமது கிராமங்கள் எரிக்கப்பட்டன. நமது நாகரீகம் அழிக்கப்பட்டது. நமது கோயில்கள் கொள்ளையடிக்கப்பட்டன. நாம் அமைதியான பார்வையாளர்களாக கையறு நிலையில் இருந்தோம்.

இந்த வரலாறு நமக்கு ஒரு சவாலை முன்வைக்கிறது. இன்று இந்தியாவில் உள்ள ஒவ்வொரு இளைஞருக்குள்ளும் அந்த தீப்பொறி இருக்க வேண்டும். பழிவாங்குதல் என்ற வார்த்தை சிறந்தது அல்ல. ஆனால், பழிவாங்குதல் என்பது ஒரு வலிமையான சக்தி. நமது வரலாற்றுக்காக நாம் பழிவாங்க வேண்டும். நமது உரிமைகள், நமது யோசனைகள், நமது நம்பிக்கைகளின் அடிப்படையில் ஒரு சிறந்த இந்தியாவை நாம் கட்டியெழுப்பக்கூடிய இடத்துக்கு இந்த நாட்டை நாம் மீண்டும் கொண்டு செல்ல வேண்டும்.

இந்தியாவின் பண்டைய நாகரீகம் மேம்பட்டதாகவும் அமைதியானதாகவும் இருந்தது. ஆனால், பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் குறித்த கடந்தகால அலட்சியம் கடுமையான பாடங்களைக் கற்பித்தது. நம்மிடம் மிகவும் வளர்ந்த நாகரீகம் இருந்தது. நாம் யாருடைய வழிபாட்டுத் தலங்களையும் அழிக்கவில்லை. நாம் உலகின் எந்த பகுதிக்கும் சென்று கொள்ளையடிக்கவில்லை. உலகின் மற்ற பகுதிகள் மிகவும் பின்தங்கி இருந்தபோது நாம் அந்த நாட்டையும் அல்லது மக்களையும் தாக்கவில்லை.

ஆனால், நமது பாதுகாப்பையும், நமக்கு இருந்த அச்சுறுத்தல்களையும் புரிந்து கொள்வதில் நாம் தவறிவிட்டோம். நாம் அதில் அலட்சியமாக இருந்தபோது வரலாறு நமக்கு ஒரு பாடத்தைக் கற்பித்தது. அந்த பாடத்தை நாம் கற்றுக்கொண்டோமா? அந்த பாடத்தை நாம் நினைவில் வைத்திருப்போமா? வருங்கால சந்ததியினர் அந்த பாடத்தை மறந்துவிட்டால், அது இந்த நாட்டுக்கு ஏற்படும் மிகப்பெரிய சோகமாக இருக்கும்'' என தெரிவித்தார்.

விக்சித் பாரத் இளம் தலைவர்கள் கலந்துரையாடலின் முதல் நிகழ்வு கடந்த ஆண்டு ஜனவரியில் டெல்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.



# உக்ரைன் மீது ரஷ்யா கடும் தாக்குதல்: 4 பேர் உயிரிழப்பு

கீவ், ஜன.11-

ரஷ்யாவும் உக்ரைனும் 2022 பிப்ரவரி முதல் போரிட்டு வருகின்றன. இதில் ஏராளமானோர் உயிரிழந்தனர். இந்நிலையில் உக்ரைன் மீது ரஷ்யா நேற்று முன்தினம் இரவு கடும் தாக்குதல் நடத்தியது.

இதுகுறித்து உக்ரைன் அதிகாரிகள் நேற்று கூறுகையில், "36 ஏவுகணைகள், 242 டிரோன்களை பயன்படுத்தி இந்த தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் கீவ் நகரில் 4 பேர் இறந்தனர். 22 பேர் காயம் அடைந்தனர்'' என்றனர். இந்த தாக்குதலுக்கு உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி கண்டனம் தெரிவித்துள்ளார்.

# தணிக்கை சான்றிதழ் வழங்க காலக்கெடு நிர்ணயிக்க வேண்டும்'' : கமல்ஹாசன்



சென்னை, ஜன.11-

"தணிக்கை சான்றிதழ் வழங்க வரையறுக்கப்பட்ட காலக்கெடு, வெளிப்படையான மதிப்பீடு ஆகியவைதான் இப்போதைய தேவை" என மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவர் கமல்ஹாசன் தெரிவித்துள்ளார்.

'ஜனநாயகன்' திரைப்படத்துக்கு தணிக்கை சான்றிதழ் வழங்கும் விவகாரம் பெரும் சர்ச்சையை உருவாக்கியுள்ள நிலையில் இதுகுறித்து கமல்ஹாசன் வெளியிட்ட அறிக்கையில், 'இந்திய அரசியலமைப்புச் சட்டம் கருத்துச் சுதந்திரத்திற்கு உத்தரவாதம் அளிக்கிறது. அது பகுத்தறிவால் வழிநடத்தப்பட வேண்டுமே தவிர, தெளிவற்ற தன்மையால் முடக்கப்படக் கூடாது. இது எந்த ஒரு திரைப்படத்தையும் விடப் பெரியது. இது அரசியலமைப்பு ஜனநாயகத்தில் கலைக்கும் கலைஞர்களுக்கும் நாம் வழங்கும் இடத்தையே பிரதிபலிக்கிறது.

சினிமா என்பது ஒரு தனிநபரின் உழைப்பு மட்டுமல்ல, எழுத்தாளர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள், கலைஞர்கள், திரையரங்கு உரிமையாளர்கள் மற்றும் நியாயமான மற்றும் சரியான நேரத்திலான செயல்முறையை நம்பி வாழும் சிறு வணிகங்கள் அடங்கிய ஒரு சூழல் அமைப்பின் கூட்டு முயற்சியாகும்.

தெளிவு இல்லாதபோது, படைப்பாற்றல் கட்டுப்படுத்தப்படுகிறது, பொருளாதார நடவடிக்கைகள் பாதிக்கப்படுகின்றன மற்றும் பொதுமக்களின் நம்பிக்கை பலவீனமடைகிறது. தமிழ்நாட்டிலும், இந்தியாவிலும் உள்ள சினிமா ரசிகர்கள் கலைகளின் மீது ஆர்வத்தையும், பகுத்தறியும் திறனையும், முதிர்ச்சியையும் கொண்டுள்ளனர். அவர்களுக்கு தேவை வெளிப்படைத்தன்மையும், மரியாதையும் ஆகும்.

இப்போது தேவைப்படுவது, தணிக்கை சான்றிதழுக்கான வரையறுக்கப்பட்ட காலக்கெடு, வெளிப்படையான மதிப்பீடு மற்றும் பரிந்துரைக்கப்படும் ஒவ்வொரு வெட்டு அல்லது திருத்தத்திற்கும் எழுத்துப்பூர்வமான, காரணத்துடன் கூடிய விளக்கத்துடன், சான்றிதழ் வழங்கும் செயல்முறைகளை ஒரு கொள்கை ரீதியாக மறுபரிசீலனை செய்வதாகும்.

முழு திரைப்படத் துறையும் ஒன்றிணைந்து, நமது அரசு நிறுவனத்துடன் அர்த்தமுள்ள, ஆக்கபூர்வமான உரையாடலில் ஈடுபடுவதற்கான தருணமும் இதுதான். இத்தகைய சீர்திருத்தம் படைப்புச் சுதந்திரத்தைப் பாதுகாக்கும். அரசியலமைப்பு மதிப்புகளை நிலைநிறுத்தும். மேலும் கலைஞர்கள் மற்றும் மக்கள் மீதான நம்பிக்கையை உறுதிப்படுத்துவதன் மூலம் இந்தியாவின் ஜனநாயக நிறுவனங்களை வலுப்படுத்தும்' எனத் தெரிவித்துள்ளார்.



# ஏழுமலையான் கோயிலில் 10 நாளில் ரூ.41 கோடி காணிக்கை 7.38 லட்சம் பேர் சொர்க்க வாசல் தரிசனம்

திருமலை, ஜன.11-

திருப்பதி திருமலையில் உள்ள அன்னமய்யா பவனில் நேற்று தேவஸ்தான அறங்காவலர் குழு தலைவர் பிஆர் நாயுடு, நிர்வாக அதிகாரி அனில் குமார் சிங்கால் மற்றும் கூடுதல் நிர்வாக அதிகாரி வெங்கய்ய சவுத்ரி ஆகியோர் கூட்டாக செய்தியாளர்கள் சந்திப்பில் பேசியதாவது: கடந்த டிச. 30ம் தேதி முதல் ஜன. 8ம் தேதி வரை வைகுண்ட ஏகாதசியையொட்டி சொர்க்க வாசல் தரிசனம் ஏற்பாடு செய்யப்பட்டது. ஒருங்கிணைப்பு கட்டுப்பாட்டு அறை மூலம் 24 மணி நேரமும் ஏஐ தொழில்நுட்பம் மூலம் பக்தர்களின் கூட்டத்தை கண்காணித்து அதற்கு தகுந்தது போல் தரிசன ஏற்பாடுகளை செய்தோம்.

கடந்த ஆண்டு 6.83 லட்சம் பேர் சொர்க்க வாசல் தரிசனம் செய்த நிலையில், இம்முறை 7.38 லட்சம் பேர் சொர்க்க வாசல் தரிசனம் செய்தனர். கடந்த 10 நாட்களில் 182 மணி நேர தரிசன வேளையில், 164 மணி நேரம் சாமானிய பக்தர்களுக்கு ஒதுக்கப்பட்டது. அந்த 10 நாட்களில் உண்டியலில் ரூ.41.14 கோடி காணிக்கை செலுத்தப்பட்டுள்ளது. 44 லட்சம் லட்டு பிரசாதம் விற்பனையாகி உள்ளன. இது கடந்த ஆண்டை விட 10 லட்சம் லட்டுகள் அதிகம். 10 நாட்களில் 33 லட்சம் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டுள்ளது.

# 'குறள் வாரம்' நிகழ்வுகளுக்கான சிறப்புக் காணொலி முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியீடு




சென்னை, ஜன.11-

குறள் வாரவிழா நிகழ்வுகளுக்கான சிறப்பு காணொலியையும், பதாகையினையும் முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: முக்கடல் சூழும் குமரி முனையில், முப்பால் புலவர் வள்ளுவருக்கு முன்னாள் முதல்வர் கருணாநிதி வைத்த சிலை நிறுவப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவையொட்டி 31.12.2024ஆம் நாளன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைபெற்ற வெள்ளிவிழா நிகழ்ச்சியில் முதல்வர் மு.க. ஸ்டாலின், "தமிழின் பெருமையை, குறளின் அருமையை இளைய தலைமுறைக்கு கொண்டு செல்லும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் கடைசி வாரம் 'குறள் வாரம்' கொண்டாடப்படும் எனவும், தமிழ்த் திறனறித் தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான திருக்குறள் மாணவர் மாநாடு ஆண்டுதோறும் நடத்தப்படும்" எனவும் அறிவித்தார்.

மேற்கண்ட அறிவிப்பினை செயல்படுத்திடும் பொருட்டு, 2026ஆம் ஆண்டு ஜனவரியில் "குறள் வாரவிழா" கொண்டாடிட ஆணையிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், சேலம், திருச்சிராப்பள்ளி, தேனி, கடலூர் ஆகிய நான்கு மாவட்டங்களிலும் திருக்குறள் நாட்டிய நாடகம் / இசை நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. தமிழ்நாட்டில் உள்ள 38 மாவட்டங்களிலும் பொதுமக்கள் மட்டும் பங்கேற்கும் வகையில் குறள் ஓவியம்/குறள் ஒப்பித்தல் போட்டி நடைபெறவுள்ளது.

கோயம்புத்தூர், வேலூர், தஞ்சாவூர், விருதுநகர் ஆகிய நான்கு மாவட்டங்களில் கல்லூரி மாணவர்களுக்கான குறள் சார்ந்த கலை நிகழ்ச்சிகள் மற்றும் ஓவியம், படத்தொகுப்புப் போட்டிகள் நடைபெறவுள்ளன. மதுரை, ஈரோடு, நாமக்கல், திருவாரூர் ஆகிய நான்கு மாவட்டங்களில் பார் போற்றும் பட்டிமன்ற நடுவர்கள் தலைமையில் திருக்குறள் சார்ந்த பட்டிமன்றம் நடைபெறவுள்ளது.

சென்னை, வள்ளுவர் கோட்டத்திலும், மெரினா கடற்கரையிலும் ஜேம்ஸ் வசந்தனின் தமிழோசை நிகழ்ச்சி பெருநகர சென்னை மாநகராட்சி ஒருங்கிணைப்பில் நடைபெறவுள்ளது. திருப்பூரில் 21.01.2026 புதன்கிழமையன்று அரசு அலுவலர்கள், பணியாளர்கள் ஆசிரியர்கள் பெரும் அளவில் பங்குபெறும் குறளாசிரியர் மாநாடு (ம) குறள் வினாடிவினா நிகழ்ச்சிகள் மாவட்ட நிருவாக ஒருங்கிணைப்பில் நடைபெறவுள்ளன.

முதல்வர் மு.க.ஸ்டாலினின் அறிவுரைக்கிணங்க, தமிழ் மொழிக்கென்று முதன்முறையாக ஆண்டுதோறும் நடத்தப்பெற்றுவரும் திறனறித் தேர்வில் வெற்றி பெற்ற 1500 மாணவர்கள் கலந்து கொள்ளும் குறள் மாணவர் மாநாடு கன்னியாகுமரியில் 23.01.2026 மற்றும் 24.01.2026 ஆகிய இரு நாள்கள் பல்வேறு நிகழ்ச்சிகளுடன் நடைபெறவுள்ளன.

"திருக்குறள் திருவிழா தமிழ் மக்களுக்கானத் தெவிட்டாதப் பெருவிழா" என்ற பெருமிதத்துடன் குறள் வாரம் நிகழ்வுகளுக்கென தயாரிக்கப்பட்டுள்ள சிறப்புக் காணொலியையும், நிகழ்வுகளுக்கானப் பதாகையினையும் முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று (10.01.2026) முகாம் அலுவலகத்தில் வெளியிட்டார்.

இந்நிகழ்வில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே. ராஜாராமன், பெருநகர சென்னை மாநகராட்சி இணை ஆணையர் மற்றும் திருக்குறள் வார விழா நிகழ்வுகளுக்கான சிறப்பு அலுவலர் முனைவர் வீ.ப.ஜெயசீலன், தமிழ் வளர்ச்சி இயக்குநர் ஔவை அருள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# தொடர்ந்து அமளியில் ஈடுபட்ட ஆம் ஆத்மி எம்எல்ஏ.க்கள் 4 பேர் சஸ்பெண்ட்



புதுடெல்லி, ஜன.11-

டெல்லி சட்டப்பேரவை கூட்டத்தொடர் நடைபெற்று வருகிறது. இந்நிலையில், ஆம் ஆத்மி மூத்த தலைவர் ஆதிஷி, சீக்கியர்கள் வணங்கும் குரு தேஜ் பகதூர் குறித்து அவதூறான கருத்துகளை கூறியதாக ஆளும் பாஜக.வினர் குற்றம் சாட்டினர்.

அவரை எம்எல்ஏ பதவியில் இருந்து நீக்க வேண்டும் என்று பாஜக.வினர் குரல் எழுப்பினர். இதையடுத்து ஆதிஷியின் பேச்சுகள் அடங்கிய வீடியோவை தடயவியல் ஆய்வுக்கு அனுப்ப சபாநாயகர் விஜயேந்திர குப்தா உத்தரவிட்டார்.

இந்நிலையில், நேற்று காலை பேரவை கூடியது. அப்போது ஆத் ஆத்மி எம்எல்ஏ.க்கள் அவை நடுவில் வந்து, “ஆதிஷியின் பேச்சுகள் அடங்கிய வீடியோவை பாஜக.வினர் தொடர்ந்து சமூக வலைதளங்களில் வெளியிடுகின்றனர். இந்த விவகாரத்தை தடயவியல் ஆய்வுக்கு சபாநாயகர் அனுப்பி உள்ளார். அதனால், வீடியோவை வெளியிடக் கூடாது என்று பாஜக.வினருக்கு உத்தரவிட வேண்டும்'' என்று வலியுறுத்தினர்.

அதற்கு பாஜக எம்எல்ஏ.க்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். இதையடுத்து ஆம் ஆத்மிஎம்எல்ஏ.க்கள் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டனர். இதையடுத்து, ஆம் ஆத்மி எம்எல்ஏ.க்கள் சோம் தத், ஜர்நெய்ல் சிங், சஞ்சீவ் ஜா, குல்தீப் குமார் ஆகிய 4 பேரையும் கூட்டத்தொடர் முழுவதும் சஸ்பெண்ட் செய்வதாக சபாநாயகர் அறிவித்தார். இதனால் பரபரப்பு ஏற்பட்டது.

# சபரிமலை தங்கம் திருட்டு வழக்கில் தந்திரி கண்டரரு ராஜீவரு கைது



திருவனந்தபுரம், ஜன.11-

சபரிமலை ஐயப்பன் கோயில் தங்கம் திருட்டு வழக்கில் தந்திரி கண்டரரு ராஜீவரு கைது செய்யப்பட்டு உள்ளார்.

கேரளாவில் உள்ள சபரிமலை ஐயப்பன் கோயில் கருவறையின் கதவுகள் மற்றும் பீடத்துடன்கூடிய 2 துவாரபாலகர் சிலைகளுக்கு தங்க முலாம் பூசப்பட்டது. அதன் பிறகு 4.5 கிலோ தங்கம் மாயமாகி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இது தொடர்பாக கேரள உயர் நீதிமன்றத்தின் மேற்பார்வையில் விசாரணை நடைபெற்று வருகிறது.

இந்த வழக்கில் 10 பேர் கைது செய்யப்பட்டு உள்ளனர். இதன் தொடர்ச்சியாக சபரிமலை ஐயப்பன் கோயில் தந்திரி கண்டரரு ராஜீவரு நேற்று கைது செய்யப்பட்டார். இதுகுறித்து சிறப்பு புலனாய்வு பிரிவு போலீஸார் கூறும்போது, “முன்னாள் அர்ச்சகர் உன்னிகிருஷ்ணன் நம்பூதிரியை, தேவசம் போர்டிடம் தந்திரி கண்டரரு ராஜீவரு அறிமுகம் செய்திருக்கிறார். அவரது அறிவுரைப்படியே துவாரபாலகர் சிலைகளுக்கு தங்க முலாம் பூசும் பணி உன்னிகிருஷ்ணனிடம் ஒப்படைக்கப்பட்டு இருக்கிறது.

இதுதொடர்பாக ராஜீவருவிடம் விசாரணை நடத்தப்பட்டு வந்தது. தங்கம் திருட்டு வழக்கில் அவருக்கு தொடர்பு இருப்பது உறுதி செய்யப்பட்டதால் அவரை கைது செய்துள்ளோம்'' என்று தெரிவித்தனர்.

சபரிமலை ஐயப்பன் கோயில் தங்கம் திருட்டு தொடர்பாக அமலாக்கத் துறை தனியாக வழக்குப் பதிவு செய்து விசா ரணை நடத்தி வருகிறது. இது தொடர்பாக இதுவரை 15 பேர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு இருக்கிறது. அமலாக்கத் துறை வட்டா ரங்கள் கூறும்போது, “தங்கம் திருட்டு வழக்கில் கேரள போலீஸார் 11 பேரை கைது செய்துள்ளனர். நீதிமன்ற அனுமதியுடன் அவர்களை எங்கள் காவலில் எடுத்து விசாரணை நடத்துவோம்'' என்று தெரிவித்தன.




# சத்தீஸ்கர் மாநிலத்தில் 63 நக்சலைட்கள் சரண்

தந்தேவாடா, ஜன.11-

சத்தீஸ்கரின் தந்தேவாடா மாவட்டத்தில் 63 நக்சலைட்கள் நேற்று சரணடைந்தனர். இதில், 18 பேர் பெண்கள் ஆவர். குறிப்பாக, 7 பேருக்கு தலா ரூ.8 லட்சம் பரிசுத்தொகை அறிவிக்கப்பட்டிருந்தது. மற்ற 7 நக்சலைட்களுக்கு தலா ரூ. 5 லட்சம், 8 பேருக்கு தலா ரூ. 2 லட்சம், 11 பேருக்கு தலா ரூ.1 லட்சம் மற்றும் 3 பேருக்கு தலா ரூ. 50,000 பரிசுத்தொகை என 36 பேரின் தலைக்கு மொத்தம் ரூ. 1,19,50,000 வெகுமதி அறிவிக்கப்பட்டிருந்தது.

மாநில அரசின் மறுவாழ்வு கொள்கையால் ஈர்க்கப்பட்டு நக்சலைட்கள் சரணடைய முன்வந்துள்ளனர். இவர்கள் அனைவருக்கும் தலா ரூ. 50,000 உதவித் தொகை உடனடியாக வழங்கப்படும். நக்சலைட்கள் ஆதிக்கத்தை வரும் மார்ச் 31க்குள் முற்றிலுமாக ஒழிக்க மத்திய அரசு தீர்மானித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# ட்ரம்பிடம் போனில் பேச மோடி மறுத்ததால் இந்தியா அமெரிக்கா வர்த்தக ஒப்பந்தம் முடக்கம்



வாஷிங்டன், ஜன.11-

ரஷ்யாவிடம் இருந்து இந்தியா கச்சா எண்ணெய் வாங்குவதால் இந்திய பொருட்களுக்கு அமெரிக்க அரசு 50 சதவீத வரியை விதித்து வருகிறது.

வரி விதிப்பு தொடர்பாக இருநாடுகளின் மூத்த அதிகாரிகள் பல்வேறு சுற்று பேச்சுவார்த்தைகளை நடத்தினர். இதுகுறித்து அமெரிக்க வர்த்தக அமைச்சர் ஹோவர்ட் லுட்னிக் கூறியதாவது: இந்தியா, அமெரிக்கா இடையிலான வர்த்தக ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டுவிட்டது. வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக அதிபர் ட்ரம்பை, பிரதமர் மோடி தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசுமாறு அறிவுறுத்தினேன். ஆனால் எனது கோரிக்கையை இந்திய குழுவினர் ஏற்கவில்லை. அதிபர் ட்ரம்பிடம், இந்திய பிரதமர் நரேந்திர மோடி போனில் பேச மறுத்ததால் இரு நாடுகள் இடையிலான வர்த்தக ஒப்பந்தம் முடங்கியிருக்கிறது.

எனினும் இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ், வியட்நாம், மலேசியா உள்ளிட்ட நாடுகளின் தலைவர்கள் அதிபர் ட்ரம்பை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினர். அந்த நாடுகளுடன் வர்த்தக ஒப்பந்தம் அதிகாரப்பூர்வமாக கையெழுத்தாகிவிட்டது.

மூன்று வாரங்களுக்கு பிறகு இந்திய அதிகாரிகள் என்னை தொடர்பு கொண்டனர். அப்போது “3 வாரங்களுக்கு முன்பே ரயில் புறப்பட்டு சென்றுவிட்டது. இனிமேல் என்னால் ஒன்றும் செய்ய முடியாது'' என்று தெளிவாக கூறிவிட்டேன். இதே பிரச்சினையின் போது பிரிட்டன் பிரதமர் கெய்ர் ஸ்டார்மர், அதிபர் ட்ரம்பை தொடர்பு கொண்டு ஒப்பந்தத்தை இறுதி செய்துவிட்டார். இவ்வாறு லுட்னிக் தெரிவித்தார்.

# ‘மக்கள் நம்பிக்கையை இழந்துவிட்டதால் திமுக வன்முறையில் ஈடுபடுகிறது'' இந்து முன்னணி




சென்னை, ஜன.11-

‘‘இந்து விரோத திமுகவின் செயலுக்கு முடிவுரை எழுதும் நேரம் நெருங்கிவிட்டது. திமுகவின் வன்முறை செயலுக்கு காவல்துறை துணை போவதை இந்து முன்னணி வன்மையாகக் கண்டிக்கிறது'' என இந்து முன்னணி மாநிலத்தலைவர் காடேஸ்வரா சி. சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “தனியார் தொலைக்காட்சி ஒன்றில் நேற்று நடந்த விவாத நிகழ்ச்சி முடிந்து வெளியில் வந்த பாஜக மாநில இளைஞர் அணி தலைவர் எஸ்.ஜெ. சூர்யா மீது திட்டமிட்டு கொலைவெறித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதனை பத்திரிகையாளர் என கூறிக்கொள்ளும் திமுக ஆதரவாளர் செந்தில் பகிரங்கமாக சதி செய்து பேசும் வீடியோ சமூக ஊடகத்தில் வெளிவந்துள்ளது.

இந்தச் சம்பவத்தில் அந்தப் பகுதி கவுன்சிலர் மற்றும் கொலை குற்றவாளிகள் சிலரை போலீஸ் ஈடுபடுத்தியதாகத் தெரிகிறது. சென்னை காவல்துறை ஆணையர் அலுவலகம் அருகில் வன்முறை நடந்துள்ளது. அங்கு பாதுகாப்பிற்கு இருந்த போலீசார் கைகட்டி வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கு வந்த ரடிகள், அங்கு இருந்த தனியார் பாதுகாவலர்களை மிரட்டுகின்றனர். மேலும் கண்காணிப்பு கேமராவில் செல்போனில் படம் எடுத்து விடக்கூடாது என்று மின் விளக்குகள் அனைத்தையும் அணைக்க வைத்துள்ளனர்.

இன்னும் சில மாதங்களே ஆட்சி இருக்கையில் திமுக அராஜகத்தை கட்டவிழ்த்து விடுகிறது. மக்களின் நம்பிக்கையை இழந்த அரசியல் கட்சியின் கடைசி ஆயுதம் கலவரம். இதற்கு காவல்துறை, அரசு அதிகாரிகள் துணை நிற்கிறார்கள் என்று பகிரங்கமாக குற்றம் சாட்டுகிறோம். திருப்பரங்குன்றம் மலை மீது தீபம் ஏற்றிட, நீதிமன்றம் தந்த தீர்ப்பை மதிக்காமல் நடந்து கொள்ள அரசு அதிகாரிகளுக்கும், காவல்துறை அதிகாரிகளுக்கும் தைரியம் வந்தது எப்படி? காரணம் ஆளும்கட்சி தரும் தைரியம் தான்.

திருப்பூர் பெருமாநல்லூர் அருகில் இருக்கும் கல்லாங்குன்றம் முருகன் கோயிலை சட்டவிரோதமாக அரசு அதிகாரிகள் இடித்தபோது நடந்த சம்பவங்களும் திமுக அரசின் கீழ்த்தரமான செயலையே உறுதிப்படுத்துகிறது. அரசும், அரசு அதிகாரிகளும் கூட்டு சேர்ந்து அதிகார துஷ்பிரயோகம் செய்வதை மக்கள் கவனித்துக் கொண்டு வருகிறார்கள்.

திமுக ஆட்சி என்றாலே வன்முறை, சட்டவிரோதம், கலவரம், பயங்கரவாதம், போதை ஆகியவை தலைவிரித்தாடும் என்றே மக்களும் கூறுகிறார்கள். மக்களின் மறதியை பயன்படுத்தியும், மக்களின் ஆசையைத் தூண்டியும் வாக்குகளை பெற்று ஆட்சியில் அமர்ந்தவுடன், மீண்டும் அராஜகத்தில் ஈடுபடுவது என்பது தான் திமுகவின் வரலாறு.

அதர்மம் எவ்வளவு தான் ஆட்டம் போட்டாலும் அதற்கு அழிவு தான் முடிவு. இந்து விரோத திமுகவின் செயலுக்கு முடிவுரை எழுதும் நேரம் நெருங்கிவிட்டது.

ஊடகத்தின் வாயை மூடலாம், மக்களின் எதிர்ப்பிற்கு திரை போட்டு மூட முடியாது என்பதை தமிழக முதல்வரும், திமுகவின் தலைவருமான ஸ்டாலின் உணர வேண்டும். இந்த திட்டமிட்ட வன்முறைச் செயலில் ஈடுபட்ட நபர்கள் மீதும் அவர்களை தூண்டிவிட்டு வேடிக்கை பார்த்த சீப்பு செந்தில் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும்'' இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# நாடாளுமன்ற கூட்டத்தொடர் ஜன.28ல் தொடக்கம்: பிப்ரவரி 1ம் தேதி பட்ஜெட் தாக்கல்



புதுடெல்லி, ஜன.11-

இந்த ஆண்டில் முதல் நாடாளுமன்ற கூட்டத்தொடர் ஜனவரி 28ம் தேதி தொடங்குகிறது. இதுகுறித்து மத்திய அரசு அதிகாரிகள் நேற் று கூறியதாவது: நாடாளுமன்ற விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு, நாடாளுமன்ற கூட்டத்தொடர் நடைபெறும் தேதிகள் குறித்து இறுதி முடிவெடுத்துள்ளது. ஜனவரி 28ம் தேதி முதல் நாள் கூட்டத்தில் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு உரையாற்றுகிறார். அடுத்த நாள் 29ம் தேதி பாதுகாப்புப் படையினர் பாசறைக் குத் திரும்பும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

(குடியரசு தினம் 26ம் தேதி நடைபெறுகிறது. அன்று பாதுகாப்புப் படையினரின் அணிவகுப்புகள் நடைபெறும். அதன்பின், 29ம் தேதி குடியரசு தின விழா நிறைவை குறிக்கும் வகையில் பாதுகாப்புப் படையினர் பாசறை திரும்பும் நிகழ்ச்சி நடைபெறுவது வழக்கம்.) அதனால் அன்றைய தினம் நாடாளுமன்ற கூட்டத்தொடர் நடைபெறாது.

ஜனவரி 30ம் தேதி பொருளாதார ஆய்வறிக்கை தாக்கல் செய்யப்படும். ஜன.31ம் தேதி நாடாளுமன்ற மக்களவை, மாநிலங்களவை அலுவல்கள் நடைபெறாது. பிப்ரவரி 1ம் தேதி ஞாயிற்றுக்கிழமை நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் 9வது முறையாக மத்திய பட்ஜெட்டை தாக்கல் செய்கிறார்.

பின்னர் குடியரசுத் தலைவரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம், பட்ஜெட் மீதான விவாதம் நடைபெறும். பிப்ரவரி 13ம் தேதி கூட்டத்தொடர் ஒரு மாத விடுமுறைக்கு ஒத்திவைக்கப்படும்.

மார்ச் 9ம் தேதி மீண்டும் கூட்டத் தொடர் தொடங்கி, ஏப்ரல் 2ம் தேதி வியாழக்கிழமை நிறைவு பெறும். வழக்கமாக நாடாளுமன்ற கூட்டத் தொடர் வெள்ளிக்கிழமை ஒத்திவைக்கப்படும். இந்த ஆண்டு ஏப்ரல் 3ம் தேதி புனித வெள்ளி வருவதால், ஒரு நாள் முன்னதாக கூட்டத்தொடர் ஒத்திவைக்கப்படுகிறது.

முதல் கட்ட நாடாளுமன்ற கூட்டத்தொடர் முடிந்து ஒரு மாத விடுமுறையின் போது, பல்வேறு துறைகளின் நிலைக் குழுக்கள், கோரிக்கைகள், மானியங்கள் தொடர்பாக ஆய்வு செய்ய உதவியாக இருக்கும். இவ்வாறு மத்திய அரசு அதிகாரிகள் தெரிவித்தனர்.



# ஐஇடி தரவு மேலாண்மை தளம்: அமித் ஷா தொடங்கி வைத்தார்

குருகிராம், ஜன.11-

ஹரியானாவின் குருகிராம் மாவட்டம் மானேசரில் உள்ள தேசிய பாதுகாப்பு படை (என்எஸ்ஜி) முகாமில் தேசிய ஐஇடி தரவு மேலாண்மை அமைப்பு (என்ஐடிஎம்எஸ்) அமைக்கப்பட்டுள்ளது.

இது, தீவிரவாதத்துக்கு எதிரான அடுத்த தலைமுறை பாதுகாப்பு கேடயமாகவும் நாட்டில் நடைபெறும் அனைத்து வகை குண்டுவெடிப்புகளுக்கு எதிரான தடுப்பு நடவடிக்கையாகவும் செயல்படும் என கூறப்படுகிறது. இது, அனைத்து வகை குண்டுவெடிப்புகளையும் துல்லியமாக ஆய்வு செய்வதற்காக செயற்கை நுண்ணறிவு (ஏஐ) மற்றும் நவீன சாதனங்களுடன் உருவாக்கப்பட்டுள்ளது.இந்நிலையில் என்ஐடிஎம்எஸ் தளத்தை அமைச்சர் அமித் ஷா நேற்று காணொலி மூலம் தொடங்கி வைத்தார். அவர் பேசுகையில், ‘‘இந்த என்ஐடிஎம்எஸ் காவல் துறை, புலனாய்வு முகமைகள், மாநில தீவிரவாத எதிர்ப்புப் படைகள், என்ஐஏ போன்ற மத்தியப்படைகளுக்கு குண்டுவெடிப்புகளின் செயல்பாட்டு முறைகளை பகுப்பாய்வு செய்ய விரிவான தரவுகளை வழங்கும்'' என்றார்.

# சென்னையில் அனுமதியின்றி பொது இடங்களில் மரம் வெட்டுவோருக்கு ரூ.1 லட்சம் அபராதம்



சென்னை, ஜன.11-

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உரிய அனுமதியின்றி பொது இடங்களில் மரங்களை வெட்டுபவர்களுக்கு ரூ.1 லட்சம் அபராதம் விதிக்கப்படும் என சென்னை மாநகராட்சி எச்சரித்துள்ளது.

இது குறித்து வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பு: பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் பசுமைப் பரப்பினை அதிகரித்திடும் வகையில் பல்வகை மரக்கன்றுகள் நடப்பட்டும், குறுங்காடுகள் உருவாக்கப்பட்டும், பராமரிக்கப்பட்டு வருகின்றன. பொது இடங்களில் உள்ள மரங்கள் மற்றும் மரக்கிளைகளை அத்துமீறி வெட்டுபவர்களுக்கு அபராதம் விதித்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டும் வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள மரங்களின் கிளைகளை அகற்றுதல், காய்ந்து போன மரங்களை அகற்றுதல், மாற்று இடங்களில் மரங்களை நடுதல் மற்றும் மரங்களை அகற்றுதல் உள்ளிட்ட சேவைகளுக்கு இதுவரை அரசு மற்றும் தனியார் விண்ணப்பங்கள் வனத்துறை மூலமாக பெறப்பட்டு, இந்த விண்ணப்பங்கள் மாவட்ட பசுமைக் குழுவிற்கு நேரடியாக அனுப்பப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்த சேவையினை பொதுமக்கள் எளிமையாக பயன்படுத்துவதற்கும் காலதாமதத்தை குறைத்து துரித நடவடிக்கை மேற்கொள்ளும் வகையில் பெருநகர சென்னை மாநகராட்சி ஒரு புதிய முன்னெடுப்பை தற்பொழுது மேற்கொண்டுள்ளது.

அவ்வாறாக மரங்கள் அகற்றுதல் மற்றும் மரக்கிளைகள் அகற்றுதல் உள்ளிட்ட சேவைகள் வனத்துறை மூலமாக நேரடியாக விண்ணப்பித்த நிலையை மாற்றி 12.01.2026 முதல் அனைத்து விண்ணப்பதாரர்களும், விண்ணப்பங்களை பெருநகர சென்னை மாநகராட்சி இணையதளம் (https://chennaicorporation.gov.in/gcc/) மற்றும் நம்ம சென்னை செயலி மூலமாக மட்டுமே விண்ணப்பிக்கும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அரசு மற்றும் தனியார் விண்ணப்பதாரர்கள் இந்த சேவையை பெறுவதற்கு மாநகராட்சி இணையதளத்தில் பசுமைக் குழு போர்ட்டலில் விண்ணப்பிக்கலாம். மேலும் பெறப்பட்ட விண்ணப்பங்களை பெருநகர சென்னை மாநகராட்சி பூங்கா கண்காணிப்பாளர்/மேற்பார்வையாளர், சமூக ஆர்வலர்கள் மற்றும் வனத்துறை அலுவலர்கள் மூலமாக கள ஆய்வு மேற்கொள்ளப்படும்.

கள ஆய்வின் ஆய்வறிக்கினை பசுமை குழுவிற்கு அனுப்பப்படும். பசுமைக் குழுவின் நடவடிக்கை விபரங்கள் குறுஞ்செய்தியாக விண்ணப்பதாரர்களுக்கு அனுப்பி வைக்கப்படும். பெருநகர சென்னை மாநகராட்சியின் இணையதளத்தின் வாயிலாகவும் விண்ணப்பதாரர்கள் தெரிந்து கொள்ளலாம். பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உரிய அனுமதியின்றி பொது இடங்களில் மரங்களை வெட்டுபவர்களுக்கு ரூ.1 லட்சமும், மரக்கிளைகளை வெட்டுதல், மரத்தில் ஆணி அடித்து விளம்பரப் பலகைகள் பொருத்துதல், மரங்களைச் சுற்றி விளக்குகள் பொருத்துதல் உள்ளிட்டவற்றிற்கு ரூபாய் 15 ஆயிரமும் அபராதமாக விதிக்கப்படும்.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் மரங்கள் அகற்றுதல் மரக்கிளைகள் அகற்றுதல் உள்ளிட்ட பல்வேறு சேவைகளுக்கு பெருநகர சென்னை மாநகராட்சி இணையதளம் மற்றும் நம்ம செயலில் மூலமாக பொதுமக்கள் விண்ணப்பித்திட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



## சங்கரன்கோவிலில் தற்காலிக வியாபாரத்தை கண்டித்த போராட்டம் கலைப்பு

தென்காசி, ஜன.11-
தென்காசி மாவட்டம் சங்கரன்கோவிலில், வெளியூரிலிருந்து திருவிழா காலங்களில் பிராண்டட் நிறுவனம் தற்காலிகமாக வியாபாரம் செய்வதை கண்டித்து, நகராட்சி அலுவலகத்தின் முன்பு நகர வர்த்தக சங்க வியாபாரிகள் நூற்றுக்கும் மேற்பட்டோர் முற்றுகை போராட்டம். இப்போராட்டத்தில் நகர வர்த்தக சங்கத் தலைவர் சி.முத்தையா கோணார், செயலாளர் டி.குருநாதன், பொருளாளர் எஸ்.ஆர். எல்.வேணுகோபால் என்ற கண்ணன், நகைக்கடை வியாபாரிகள் சங்க செயலாளர் அனுசியா ஜுவல்லர்ஸ் மாரிமுத்து, பாத்திரக்கடை சங்க நிர்வாகிகள் பொன்ராஜ் சுப்பிரமணியம் மற்றும் அனைத்து சங்க நிர்வாகிகளும் கலந்து கொண்டு போராட்டம் நடத்தினர். இப்போராட்டத்தின் முக்கிய கருத்துக்களை நகரமன்ற தலைவி கௌசல்யா உடன் பேச்சுவார்த்தை நடத்திய போது, நகர வர்த்தக சங்க தலைவர் மற்றும் அனைத்து வியாபார சங்க நிர்வாகிகளும் திருவிழா காலங்களில் நடத்தப்படும் எந்த ஒரு பிராண்டட் நிறுவனங்களையும் தற்காலிகமாக வியாபாரம் செய்வதால் ஆயிரத்திற்கும் மேற்பட்ட வியாபாரிகள் பாதிப்படைகின்றனர் என்பதை கருத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டி கோரிக்கையை முன்வைத்தனர்.

நகர மன்ற தலைவி கௌசல்யா 24 மணிநேரத்தில் தற்காலிக பிராண்டட் நிறுவனம் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து தற்போது போராட்டம் கலைக்கப்பட்டது.



■ தென்காசி மாவட்டம்புளியங்குடி பங்கு ஆர் சி பள்ளிகளின் தாளாளர் ஜே.எட்வின்ராஜ் தலைமையில்,பள்ளியின் தலைமை ஆசிரியை லீமா ரோஸ் மற்றும் பள்ளி நலக்குழு தலைவர் வி. பால்ராஜ் முன்னாள் நகர்மன்ற உறுப்பினர் ஆகியோர் முன்னிலையில்,நகர்மன்ற உறுப்பினர் தங்கம் ஜோதிபாண்டியன் மாணவ மாணவியருக்கு தமிழக அரசின் விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார்கள்.



## அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு முன்னேற்பாடு பணிகளை அமைச்சர் மூர்த்தி பார்வையிட்டார்

அலங்காநல்லூர். ஜன. 11-
மதுரை மாவட்டம் அலங்காநல்லூரில் வரும் 17ஆம் தேதி நடைபெற உள்ள ஜல்லிக்கட்டை முன்னிட்டு, விழா நடைபெறும் இடம், தற்காலிக கேலரி அமைய உள்ள இடம், பார்வையாளர்கள் அமரும் இடம், காளைகள் நிறுத்துமிடம், மருத்துவர்கள் ஆய்வு செய்யுமிடம் உள்ளிட்டவைகளை வணிகவரி மற்றும் பத்திர பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, நேரில் ஆய்வு செய்து பார்வையிட்டார், முன்னதாக அப்பகுதியில் தற்காலிக கேலரி அமைப்பதற்கு சிறப்பு பூஜை நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு பூஜையை தொடங்கி வைத்தார். அதனை தொடர்ந்து வாடிவாசல் அரசு மருத்துவமனை யூனியன் அலுவலகம் பேரூராட்சி அலுவலகம் கலைஞர் நூலக பகுதிகள் நேரில் பார்வையிட்டு அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார் ஜல்லிக்கட்டுக்கு தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் வருகை தர உள்ளதால் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்தும் காவல்துறை அதிகாரிகளிடம் கேட்டு ஆலோசனை நடத்தினார். இதில்

மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அரவிந்த், சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன், திமுக ஒன்றிய செயலாளர் தன்ராஜ், நகர செயலாளர் ரகுபதி, பேரூராட்சி தலைவர் ரேணுகாஈஸ்வரி கோவிந்தராஜ், துணைத்தலைவர் சுவாமிநாதன்,

ஒப்பந்தக்காரர் கண்ணன், உள்பட வருவாய்த்துறை கால்நடைத்துறை உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## மதுரையில் தமிழ் நாடு மாநில ஊரக நகர்ப்புற வாழ்வாதார அனைத்து பணியாளர்கள் காத்திருப்பு போராட்டம்



மதுரை, ஜன.11-
மதுரைரிசர்வ்லைன் பகுதியில்அமைந்துள்ள மாவட்ட அலுவலகம் முன்பு தமிழ் நாடு மாநில ஊரக நகர்ப்புற வாழ்வாதார அனைத்து பணியாளர்கள் நல சங்கம் சார்பில் 14 அம்ச கோரிக்கைகளை நிறை வேற்ற கோரி மாபெரும் காத்திருப்பு போராட்டம் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநில செயலாளர் கா. நீதிராஜன், தலைமையில் நடைபெற்றது.மேலும் இப்போராடத்தில் கோரிக்கைகளாக ஆண்டு தோறும் பணி புதுப்பித்தல் முறையை கைவிட்டு பத்தாண்டுகளுக்கு மேலாக பணியாற்றும் பணியாளர்களுக்கு பணி பாதுகாப்பு மற்றும் பணி நிரந்தரம் வழங்குதல், வாழ்வாதார பணியாளர்களுக்கு சம வேலைக்கு சம ஊதியம் வழங்குதல், பெண் பணியாளர்களுக்கு ஊதியத்துடன் மகப்பேறு விடுப்பு வழங்குதல், சமுதாய சுய உதவிக் குழு பயிற்று நர்களுக்கு மதிப்பூதியமாக மாதம் ரூபாய் 10,000 வழங்குதல், மேலும் வெளியேற்றப்பட்ட பணியாளருக்கு மீண்டும் பணி வாய்ப்பு வழங்குதல் உள்ளிட்ட 14 அம்சகோரிக்கை தமிழக அரசு உடனடியாக நிறைவேற்ற வலியுறுத்தி கண்ணில் கருப்பு துணி கட்டி மாபெரும் காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்நிகழ்ச்சியில் மாவட்டத் தலைவர் செண்பகவள்ளி, மாவட்ட செயலாளர் மகாலட்சுமி, பொருளாளர் சந்திரசேகர், மற்றும் மாநில செயலாளர் நீதிராஜன், மாவட்ட செயற்குழு உறுப்பினர் சிவகுரும்பன், மதுரை மாவட்ட செயற்குழு உறுப்பினர் முத்துவேல், உள்பட ஆயிரத்துக்கும் மேற்பட்ட பணியாளர்கள் கலந்து கொண்டு கண்டன கோஷமிட்டனர்.



■ தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திருவள்ளுவர் மாவட்டத்தில் தமிழ்நாடு அரசின் "உங்க கனவ சொல்லுங்க" திட்டத்தை தொடங்கி வைத்தார் அதனை தொடர்ந்து மதுரை மாவட்டம், திருப்பாலை இ.எம்.ஜி.யாதவா கல்லூரியில் மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி உங்க கனவ சொல்லுங்க" திட்டத்தின் தன்னார்வலர்களுக்கு கைபேசி இணைப்புக்களை வழங்கினார். மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன்குமார் மாவட்ட மகளிர் திட்ட இயக்குநர் தமிழரசி ஆகியோர் உடன் உள்ளனர்.



■ மதுரை மாவட்டம், அரசு இராசாசி மருத்துவமனையில் தேசிய சுகாதார இயக்க நிதி திட்டத்தின் கீழ், ரூபாய்.2.81 கோடி மதிப்பீட்டில் முழு உடல் மல்டி ஸ்லைஸ் சி.டி.ஸ்கேனர் (16 ஸ்லைஸ்) கருவியை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆகியோர் பயன்பாட்டுக்கு திறந்து வைத்தார்கள். மருத்துவம் (ம) மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு கூடுதல் தலைமை செயலாளர் செந்தில்குமார் , மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன்குமார், மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் பூமிநாதன், மாநகராட்சி துணை மேயர் நாகராஜன், அரசு இராசாசி மருத்துவமனை முதல்வர் மரு.அருள் சுந்தரரேஸ்குமார் ஆகியோர் உடன் உள்ளனர்

# நாங்கள் ஐ.பி. ஐயாவுக்கு ஓட்டு போட மாட்டோமா?..

### அமைச்சர் ஐ.பெரியசாமி வழங்கும் பிறந்த நாள் பொங்கல் பரிசுகளை அதிமுக கட்சியைச் சேர்ந்த பெண்கள் போட்டிபோட்டு வாங்கிச் செல்லும் மாற்றுக்கட்சியினர்



சின்னாளபட்டி, ஜன .11
திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் சட்டமன்ற தொகுதி திமுக உறுப்பினரும், திமுக மாநில துணை பொதுச்செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி அவர்கள் 1989ம் ஆண்டு முதல் இன்று வரை 37 வருடங்களாக தொகுதி மக்களோடு மக்களாக பழகிவருவதால், அவரை தொகுதி மக்கள் அவரது பெயரை உச்சரிக்காமல், ஐ.பி.யார் என்று செல்லமாக அழைப்பதுடன் தென்பாண்டி சிங்கம் என அனைத்து இடங்களிலும் சொல்வார்கள். ஆட்சியில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் தொகுதி மக்களுக்கு தீபாவளி, பொங்கல் அன்பளிப்பு வழங்குவதை வழக்கமாக கொண்டுள்ளார். இவ்வருடம் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களின் 75வது பிறந்தநாளை முன்னிட்டு, தொகுதி மக்களுக்கு எவர்சில்வர் பாத்திரம் (சம்படம்) வழங்கி வருகிறார்.

குறிப்பாக சின்னாளபட்டியில் கைத்தறி நெசவாளர்கள் அதிகம். திமுகவினர் தங்களுக்கு நெருக்கமானவர்களுக்கு டோக்கன் வழங்கி பாத்திரங்கள் வழங்க வரும்போது அதிமுக கட்சியைச் சேர்ந்த நிர்வாகிகளைத் தவிர அதிமுகவுக்கு வாக்களிக்கும் பெண்களே எங்களுக்கும் டோக்கன் கொடுங்கள் என்று கேட்பதுடன், நாங்கள் ஐ.பி. ஐயாவுக்கு ஓட்டு போட மாட்டோமா? என்று கேள்வி கேட்பதுடன் எங்கள் கட்சி நிர்வாகிகளை நாங்கள் தெருக்களில் கூட பார்க்க முடியாது, ஆனால் அமைச்சர் ஐயா பெரியசாமி அவர்கள் நல்லது, கெட்டது அனைத்திலும் கலந்து கொள்வதுடன், பாரபட்சம் இல்லாமல் நலத்திட்டங்களை குறிப்பாக தெருக்களில் வடிகால் வசதி, சாலை வசதி செய்துகொடுத்து வருகிறார். நாங்கள் சென்ற முறை ஐயாவுக்குத்தான் ஓட்டுப்போட்டோம். இந்த முறையும் அவருக்குத்தான் ஓட்டுப்போடுவோம். அவரைப்போல ஒரு நல்ல மனிதரை பார்க்க முடியாது என்று கூறுவதோடு, எங்களுக்கும் டோக்கன் கொடுங்கள், நாங்கள் ஐயா அவர்களுடைய பரிசை வாங்கிக் கொள்கிறோம் என போட்டி போட்டுக்கொண்டு வாங்கிச் செல்கின்றனர். இதுபோல மாற்றுக் கட்சியைச் சேர்ந்த பெண்களும் பாரபட்சம் இல்லாமல் திமுக நிர்வாகிகள் வழங்கும் டோக்கன்களை பெற்றுக் கொள்வது திமுகவினருக்கு வியப்பை தருகிறது. தொகுதி மக்களிடம் பாரபட்சம் காட்டாமல் எல்லோருக்கும் எல்லாம் என்ற நிலையுடன் செயல்படும் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கு அனைத்து கட்சியைச் சேர்ந்த பெண்களும் பாரபட்சம் இல்லாமல் ஆதரவு காட்டுவது பாராட்டுக்குரியது.

## ஸ்ரீசெந்தூர் முருகன் அறக்கட்டளை பொங்கலை முன்னிட்டு 300 முதியோர்களுக்கு வேஷ்டி, சேலை சின்னாளபட்டி காவல் நிலைய ஆய்வாளர் சுபத்ரா வழங்கினார்



சின்னாளபட்டி, ஜன .11-
திண்டுக்கல் மாவட்டம் சின்னாளபட்டியில் உள்ள ஸ்ரீசெந்தூர் முருகன் அறக்கட்டளை சார்பாக ஆதரவற்றோர்கள் மற்றும் முதியோர்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்குவது வழக்கம். இவ்வருடம் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு ஆதரவற்ற முதியோர்களுக்கு வேஷ்டி, சேலைகள் வழங்கும் நிகழ்ச்சி கடைவீதி சுமங்கலி திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு அறக்கட்டளை நிறுவனர் ரகுநாதன் தலைமை தாங்கினார். துணை தலைவர் வினோபா வரவேற்று பேசினார். செயலாளர் எ.மேகநாதன், உதவி செயலாளர் எம்.எஸ்.கமலநாத், ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு அழைப்பாளர்களாக பிற்பட்டோர் நலத்துறை வட்டாட்சியர் கிருஷ்ணமூர்த்தி. சின்னாளபட்டி காவல் நிலைய ஆய்வாளர் சுபத்ரா, மருத்துவர் எஸ்.பாபு, சிவக்குமார் மற்றும் முன்னாள் காந்திகிராம பல்கலைக்கழக உடற்கல்வி இயக்குநர் எம்.ஏ.சுப்பையா ஆகியோர் கலந்து கொண்டனர். விழாவில் காவல் ஆய்வாளர் சுபத்ரா அவர்கள் பேசும்போது சேவையில் உயர்ந்த சேவை ஈகை, ஒருவருக்கு நம்மால் ஒரு உதவி செய்யும் போது அவர்கள் முகத்தில் தெரியும் சந்தோஷம் தான் நம்மை வாழவைக்கும். இதுதவிர அரசாங்கம் முதியோர்களை பாதுகாக்க பல நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. எந்தவொரு உதவி என்றாலும் நீங்கள் என்னை நேரில் அணுகலாம் என்றார்.

நிகழ்ச்சியில் பேரூராட்சி வார்டு உறுப்பினர் செல்வக்குமாரி, சுமங்கலி திருமண மண்டபம் உரிமையாளர் தியாகராஜன், அறக்கட்டளை உறுப்பினர்கள் நாகேந்திரன், சரவணன், டாக்டர் பாரதி உட்பட பலர் கலந்து கொண்டனர். நிறைவாக டாக்டர் சசிரேகா நன்றி கூறினார்.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000